# முன் வைத்த கால்




இந்தியாவில் இந்து முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தி காந்திஜி நவகாளி யாத்திரை மேற்கொண்டார்

அவருடன் ஜவஹர்லால் நேருவும் சேர்ந்து கொண்டார் நடைப் பயணம் தொடர்ந்தது

ஓரிடத்தில் ஓர் ஆறு குறுக்கிட்டது காந்திஜி எதைப் பற்றியும்

சிந்திக்காமல் அந்த ஆற்றில் இறங்கி நடந்து மறுகரையை அடைந்தார்

நேருவோ கரையில் அப்படியே நின்றுவிட்டார்

இந்தச் சிறிய ஆற்றில் இறங்கி உடையை நனைத்துக் கொள்ள வேண்டுமா ஆற்றில் இறங்காமலேயே ஒரே ஓட்டமாக ஓடி வந்து. ஒரே தாவில் மறுகரையை அடைய முடியும் என்று சொன்னவர் சில அடிகள் பின்னே போனார்.

பின்னர் அங்கிருந்து ஒரே ஓட்டமாக ஓடி, சொன்னது போல் ஆற்றின் மேல் தாவிச் சென்று மறுகரையில் போய்க் குதித்தார்

பார்த்தீர்களா! எப்படி என் சாமர்த்தியம்” என்று காந்திஜியைப் பார்த்துப் பெருமிதத்துடன் சொன்னார் நேரு.

அதைக் கேட்டு மெலிதாகப் புன்னகைத்த காந்தில் உங்கள் சாமர்த்தியம் சரி, ஆனால் அதை என்னிடம் நிருபிக்க நீங்கள் பாத்தளை படிகள் பின்னே செல்ல வேண்டியிருந்தது பார்த்தீர்களா வட்சியவாதிகளுக்கும் செயல் வீரர்களுக்கும் முன் வைத்த காலை பின் வைப்பதா அழகு என்று கேட்டார்.

நேருவின் சாமர்த்தியமும் சந்தோஷமும் துன் தாளாகிலிட்டது

TamilBOOK